# சண்முகநாதன்.

# SANMUKANATHAN.

| பத்திர விகிதம். | | |
|---|---|---|
| உள்ளூருக்கு ஆ 1-க்கு ரூ. | | 1-50 |
| வெளியூருக்கு | ,, | ,, 2-00 |
| தொலைவாய்ப்பகுதிக்கு | | ,, 2-50 |
| தனிப்பிரதி | சதம் | 6 |

மாசமிருமுறை பிரகடனமாகும்.

திறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றியொழுகப்படும்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு: | ரூ—. |
| ஒரு கலத்துக்கு | 7-50 |
| அரைக்கலத்துக்கு | 4-00 |
| கால்கலத்துக்கு | 2-50 |
| வரி 1-க்கு | —8 |
| அடுத்த முறைக்கு டை அரைவாசி. | |

மலர் 5. } ❋ { யாழ்ப்பாணம், இராக்ஷத ஞூ புரட்டாதி மீ 15-உ (1—10—15) வெள்ளிக்கிழமை. } ❋ { இதழ் 5.


உ

குருமயம்.

*சங்கரன்றன் சால்பிறுமுஞ் சண்முகநா தன்*
*பெயரோ, டிங்கிதமாம் பத்திரமு மொகாளுங்—*
*இக்கமுடன், உன்னரிய சன்னிலைமை யுற்றெங்*
*கும் பல்கியிட, வன்னவன்ற னேதிணை யாம்.*

## கையொப்பநேயர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

நேயர்காள்!

நமது பத்திர புத்திரனுக்கு நான்காம் வயது பூர்த்தியாகி ஐந்தாம் வயதும் ஆரம்பித்து ஐந்தாம் இலக்கமும் வெளிப் பட்டுவிட்டது. இன்னும் உங்களிற் சிலர், செலுத்தவேண்டிய பத்திர கிரயத்தை யிறுக்காது மௌனஞ் சாதித்திருப்பது முறையாகுமா? நீங்கள் செலுத்தவேண்டிய சந்தாப்பணத்தைக் கிரமமாகச்செலுத்தாதுவிட்டால் நாம் பத்திரிகையைக் கிரமமாக நடாத்துவதெப்படி? இப்பொழுது எடுப்பித்திருக்கும் புதிய எழுத்துகள் முதலியவைகட்கு நீங்கள் கொடுக்கும் சந்தாப்பணத்தையன்றோ எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. இவற்றையெல்லாம் நீங்கள் சிந்திப்பீர்களேயாயின் நன்கு புலப்படுவதோ டமையாது கிரயப்பணத்தையும் சரிவரச் செலுத்தியேவருவீர்களென்பதிற் சந்தேகமில்லை.

ஆதலால், அன்பர்களே! நீங்கள் கொடுக்கவேண்டியதொகையை இப்பொழுதே கணக்குப் பார்த்து உடனே யனுப்பி நமது பத்திரிகை தளர்வுறுவண்ணம் ஆதரித்து வருவீர்களாக

முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திரிகோணமலை முதலிய இடங்களுக்கு இப்பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ மு. சு. மாணிக்கம்பிள்ளை வருகிறபடியால் அவ்வவ்வூர் நேயர்கள், தத்தம் கிரயத் தொகையை அவரிடம் கொடுத்தும், வேறு கையொப்பக்காரரைச் சேர்த்தும் உதவி புரியுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

"சண்முகநாதன்" மானேஜர்.


## ஸ்ரீ வாலாம்பிகை விலாச அச்சுக்கூடம்.

சிறந்த வேலைகள்! குறைந்த கிரயம்!!

மறந்துவிடாதீர்கள்!!!

இவ்வச்சுக்கூடத்திற்கு வேண்டிய எழுத்துக்கள் முதலிய சகல சாமான்களையும் புதிதாக எடுப்பித்து, சுத்தமாகவும் கூலி குறைவாகவும் சீக்கிரமாகவும் வேலை செய்து கொடுத்து வருகின்றேம. புத்தகவேலைகளுக்குரிய ஏ[illegible]மான புதிய எழுத்துக்கள் வந்திருக்கின்றன.

வேண்டியவர்கள் நேரிலாவது; கடிதமூலமாயாவது ஒழுங்கு செய்து கொள்க.

மானேஜர்,
ஸ்ரீவாலாம்பிகைவிலாச அச்சுக்கூடம்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்




## சண்முகநாதன்.


இராக்ஷதஞூ புரட்டாதி மீ 15உ வெள்ளிக்கிழமை


### கலிகால விபரீதம்,

முற்றொடர்.

போலிவிவாகம்.

(——:0:——)

ஆங்கிலகலை ஒன்றனையேகற்றுக்கொண்டு உத்தியோகத்திற்புகும் இளையோரெல்லாம், தமிழ்க்கல்வியறி வின்மையிற் திருக்குறள் முதலிய நீதிநூலறிவின்மை காரணமாக, முறைகேடான விவாகங்களைச் செய்துகொண்டு தமக்கும் பிறர்க்கும் பெருங்கெடுதியொன்றே புரிவாராகின்றனர். தாம் மணம்புரியவிரும்புங் காலத்து, மணமகளிரது குலங் குணஞ் சமயம்முதலியவற்று ளொன்றனையாவது விசாரணைசெய்யவேமாட்டார்கள். சாதியென்பதொன்றில்லையேயென்று அவர்கள்சாதிக்கத் துணிவரேயாயிற், சகலசாத்திரசம்மதமாயுள்ள சாதிக்கட்டுப்பாட்டை இல்லையென்று சாதித்து மறுக்கவியலுமா? அதனைக்குறித்திங்கே நாம் இப்பொழுது வாதிக்கவரவில்லை. அவர்களது கருத்தின்படி அதனை இப்பொழுது இங்கே இல்லையென்றுவது வைத்துக்கொள்ளினும், குடிப்பிறப்பென்றுண்டென்னு மதனையு மில்லையென்று மறுத் தழித் தொழிக்க வியலுமா? பரம்பரையாகக், கல்வியறிவு நல்லொழுக்கம் சைவாசாரம் சிவபத்தி முதலியவற்றிலே சிறந்தோங்கி விளங்கப்பெற்றுள்ள குடியின்க[illegible]வந்து பிறத்தலே குடிப்பிறப்பாமென்று, ஆன்றோர்களினாலும் நூல்களினாலும் விதந்தோதப்பட்டுள்ள அஃதொன்றே குடிப்பிறப்பென்று கொள்ளப்படும். சாதியென்பதொன்றில்லையெனச் சாதித்தொழியும் ஆங்கிலேயர் முதலிய பிறசாதியார்களும், உண்டேயாமெனச்சாதித்தொழுகும் அந்தக்குடிப்பிறப்பினையும், ஐம்புலன்களும் ஆரத்துய்க்கும் திலையில்லா இம்மைச்சிற்றின்ப போகானுபவமொன்றின் பொருட்டேயாக நம்மவர்கள் மாத்திரம் இல்லையென்று மறுத்தொழித்தல் நீதியாகுமா? அவர்கள் எக்குலத்தி னெக்குடியிற் பிறந்து எவ்வொழுக்கம் பூண்டுள்ளவரே யெனினுமென், அவர் ஆங்கிலகல்வியுங், கவுனுடையும், கன்னத்தேசரிபத் திரித்துப்பின்னே தூங்கச் சிலைத்துண்டொன்று சேர்த்துப் பின்னிய காரளகமும், காமவேகத்தைக் கருங்கடைக்கண்களான் மொழியும் பார்வையும், பிடிநடையு முடையரேயாயின்; அம்மங்கையரையே மணந்துகொள்ள மனந்துணிகின்றார்கள். அக்காளையருக்கு அப்பெண்மணிகள், இல்லக்கிழத்தியரேயாகாது, போகானுபவக் கிழத்தியரேயாக ஆகின்றனர். பின்னர், அவர் இல்லறநெறி இதுதானென்றறியா ராதலினாலும்; "ஏர்தெழின்மிக்கா ளிளையாளிசைவல்லாள்-காரன்னயா கண்கவர் நோக்கத்தாள்-வாய்ந்த-நயனுடையின்சொலாள் கேழெனினும் மாதர்க்-கயலார்மேலாகும் மனம்" என்னும் ஆன்றோர்வாக்கின் கருத்தையறியாராதலினாலும், தமக்கு நாகரிகத்தாற் சிறந்த நாரியர்கள் அகப்பட்டுக் கொண்டார்களேயென் றெழுந்த மகிழ்ச்சிமேலீட்டினாலே, அவர்களைச் சபைகளிலே கொடுசென்று, பலர்க்குங்கை கொடுக்குமாறுகவும், ஆடவர்குழாத்துட் கலந்திருந்து உணவருந்திக் குடித்து வெறித்துக் களியாட்டயருமாறுகவு மிடங்கொடுத்துத், திறந்தவண்டிகளி லேவர்ந்து, கண்டோரெல்லாங் காதலிக்குமாறலங்கரித்து, அவரைத் தம்பாங்கரேயிருத்திக், கடைவீதி வழியாக உலாவருமாறுகவுந் தொடங்கிக்கொள்கின்றார்கள். இங்ஙனமாகவே, இனி அவர்களது ஒழுக்கம் முதலியவைகளைக்குறித்தும், அவர்களுக்குப் பிறக்கும் மக்களின் நெறிகளைக் குறித்தும் இங்கே நாமெடுத்து விரித்து விளக்கவும் வேண்டுமோ?

இனித், தாங்கள் அருமையாகப்பெற்றுவளர்த்த சைவாசாரம் நல்லொழுக்கம் முதலியவற்றிலே சிறந்து, கற்பையே ஆபரணமாயணிந்த உத்தம பத்தினி மாதரசிகளைப், பெற்றோர், உத்தியோகமொன்றையேமதித்து, மதுமாமிச பட்சணிகளேயாய்த் தீயொழுக்கங்களே நிறைந்துள்ளவர்களாவுள்ள காளையர்களுக்குத் துணிந்து மணஞ்செய்து கொடுக்கின்றார்களே! இஃதன்றோ பெருங்கொடும் பாவம்! அக்காளையர்கைப்பட்ட பெண்மணிகளென் செய்வர்! அவர்கள்பாடு, குரங்குகளின் கைகளிலே வந்தகப்பட்ட பூமாலைகளின் பாடாகவன்றோ வந்துமுடிந்திருக்கின்றது! இம்மை மறுமை இரண்டுக்குங் காரணமாகிய இல்லறநிலைக்கு முழுமுதற்காரணராவுள்ளவர்கள் பெண்களேயா மன்றோ! அவர்களதுநிலை இங்ஙனமேயாகப் பழுதுபடநேரின், உலகம் நன்னெறிப்படற்கு வழிவேறெங்ஙன! ஆங்கிலகலையதி

வினுலும், உத்தியோகத்திலுலு மெழுந்த போலிநாகரிகத்தின்பயன் இதுவேயாமன்றே! நெறிகடந்த இவ் விவாகங்களினலன்றோ, இவ் வியாழ்ப்பாணத்திலே, சாதியாசார சமயாசாரங்களும், நல்லொழுக்கங்களுங், குடும்பங்களின் ஒற்றுமைகளும் அடியோடழிந்தொழிந்தன. ஆங்கிலகலையறிவு நம்மூரிலே தலையெடுக்க முன்னரும், நம்மூரிலே, இப்போதுள்ள குடும்பகலகங்களும், கல்யாணவழக்குக்களும் நடைபெற்றிருந்தனவா? பெற்றோர் சுற்றத்தவர்களது அனுமதியின்றிக், கடிதவாயிலாகக் கல்யாணங்கள் நடைபெற்றதுமுண்டா? சிவாக்கினியுஞ் சபையார்களுஞ் சாட்சியாகக், குருமுன்னிலையிலே மணஞ்செய்யப்பட்ட மகளிர், தமது நாயகரைப், பின்னர்த் தமக்கு வேண்டியதில்லையென்று மறுத்துத், தமது காணத்தையுந் துறந்து துணிந்து கோடேறி வழக்குப்பேசியதுமுண்டா? இனிப் பலபேசியாவதென்னே! நாஞ் சொல்வனவற்றையார் இப்பொழுதிங்கே கவனித்துக்கேட்கப்போகின்றனர்! யார் வாசித்துப்பார்க்கப்போகின்றனர்! தமிழ்ப் பாஷையிலே விருப்பமுள்ளவர்களும் தமிழைவாசித்து விளங்கத் தக்கவர்களு மிருப்பினன்றோ, பிரயாசப்பட்டு நாமெழுதுபவைகளை வாசித்தாவது பார்ப்பார்கள்! இனி இப்போதுள்ள இவ்வியாழ்ப்பாணத்துச்சனங்கள் முழுதுமழிந்தொழிந்து, பின்னர்ப் புதிய சிருட்டியொன்று தொடங்கப்படினன்றி நம்மவர்கள் திருத்தமுற்று நன்னிலைக்கு வரவேமாட்டார்கள். கலிகால விபரீதங்களுள்ளே இவ்விஷயமொன்றே தலையாயவிஷயமாமென்று கூறி, இவ்விஷயத்தை இத்துணையின் முடிக்கின்றோம்.

(வரும்.)

---

## பாலபாஸ்கரன்.

——(:0:)——

இது யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச்சேர்ந்த நாய்ச்சிமார் கோவிலடியிலே தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீபாஸ்கரயந்திரசாலையிலே, நாள்விகிதமாகப் பிரசரித்து வெளிப்படுத்தப்பட்டு வரும் ஒருதமிழ்ப் பத்திரிகை. இதிலே அரியபல விஷயங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் ஆங்கிலம் என்னும் இருபாஷைகளிலும் இவ்வியாழ்ப்பாணத்திலே பலபத்திரிகைகள் நடைபெற்று வரினும், நாள்விகித பத்திரிகையாக நடை பெறுவது இஃதொன்றேயாம். இதிலே வெளிப்படுத்தப்படும் விஷயங்களை உற்று யோசிக்கும் பொழுது, இதன் அதிபர், பலதுறைகளினும் பயின்றுள்ள ஒருவர்போலப் புலப்படுகின்ருர். இப்படிப்பட்ட ஒருப்த்திரிகையைத் தக்கதுணை யில்லாதவர், ஒருகாலத்தாவது துணிந்து தொடங்கவேமாட்டார். இது நெடுநிலையாக நடைபெற்று வருமேயாயின், நமது ஊருக்கு நன்மையேயாமென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. அங்ஙனமேயாகநடைபெற்று வருமாறு கடவுள் துணைபுரிவாராக. இப்பத்திரிகையை முயன்று நடத்திவருபவர், பிரபல சோதிடராக முன்னேயிருந்த பிரமஸ்ரீ. சபாதி ஐயரவர்களின் சிரேஷ்டபுத்திரராகிய ஸ்ரீபதி அவர்களேயாம். நமக்கனுப்பிவரும் பத்திரிகைக்காகத் துதிகூறுகின்றோம். நாமும் நமது பத்திரிகையைக் கிரமமாக அனுப்பிக்கொண்டு வருவோம்.

## சமாசாரங்கள்.

காலநிலை:—வயல்களிலே நெல்விதைப்புமுடிகிறது. மழைபெய்யத் தொடங்கியிருக்கின்றமையிற், கான்களிலே வெள்ளந்தங்கி நின்று, அதனால் காய்ச்சல் முதலிய நோய்கள் தொடங்கப்போகின்றன. சுகாதார சங்கத்தார், கான்களை வருடங்கள்தோறும் மழைபெய்துமுடிந்த பின்னர்த்தான் வெட்டுவிப்பது வழக்கம். இம்முறையும் அங்ஙனமே செய்து, நோய்களை விருத்திபெறச்செய்யாது முன்னராகவே கான்களை வெட்டுவிக்குமாறு அவர்களை ஞாபகப்படுத்துகிறோம். உணவுப் பதார்த்தங்களின் விலைகளை வியாபாரிகள் மென்மேலும் உயர்த்திக்கொண்டே வருகின்றார்கள். சிறி தநிகாரத்தைப்பெற்ற இமோரெல்லாம் அடக்கமுடைய அறிஞர்க்குக் கெடுதியேசெய்யத் துணிகின்றார்கள்.

---

இன்றுதொடக்கம் மல்லாகக்கோடு வைக்கப்படும்:—ஊர்காவற்றுறையில் திங்கட் கிழமையிலும், யாழ்ப்பாணத்திலே செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளிலும், மல்லாகத்திலே, வெள்ளி, சனிக்கிழமைகளிலும், கோடு வைக்கப்படும்.

---

அம்மைநோய்:—பருத்தித்துறையில் மூன்றுபேருக்கு அம்மைநோய் உண்டுபட்டிருக்கிறதாக அறிகிறோம். அவர்களில் ஒருவர் இந்தியாவிலிருந்து சில நாட்களின் முன் வந்தவர்.

---

—புகைரதவீதியிற் சிறுப்பாயிருந்த மெஸ். செல்லையா அவர்கள் கொழும்பு ரேகுச்சிறுப்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

—மெஸ். வல்லிபுரம் கனகரத்தினம் அவர்களும், குணரத்நம் வாட்சன் அவர்களும் சுப்றீம்கோட்டுத் தாணிமார்களாகச் சத்தியஞ் செய்திருக்கிறார்கள்.

---

—புதிய இலங்கைச்சேனைத் தலைவர், கொழும்பில்வந்திறங்கித்தங் கடமையையேற்றனர்.

---

ஒருபத்திரிகை நிறுத்தப்பட்டது:—லண்டன்-17, பல்கேரியாக்கவர்ன்மெண்டார் ஜெர்மனியின்சார்பாக விருப்பதைப்பற்றி ஒருபத்திரிகை ஆட்சேபித்தெழுதியது. அதனால் அதனைப் பல்கேரியாக் கவர்ன்மெண்டார்நிறுத்திவிட்டனர்; கவர்ன்மெண்டிற்கு விரோதமாக எழுதியவரும் கைதிசெய்யப்பட்டிருக்கின்றனர்.

---

ஒரு விநோதமான உத்தரவு:—சென்ற கிழமையில் கல்கத்தா சீப்பிரெசிடென்சி மாஜிஸ்டிரேட்டுக் கோட்டிலிருந்து ஓர் ஆங்கிலோ இந்தியர் தொப்பி தரித்துக்கொண்டு வெளியேவந்தார். அப்போது மாஜிஸ்டிரேட் கோர்ட் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு தொப்பி தரித்துக்கொண்டு செல்பவர்க்குத் தொப்பியை யெடுத்துவிடும்படி சொல்லச் சொன்னர். மாஜிஸ்டிரேட் குற்றவாளிசெய்த அவமரியாதைக்காக அவரை மன்னித்து, அவருடைய தொப்பியைக் கோடு குலைகிறவரையில் சிறையில் வைத்தனர். இச்செய்கை கோட்டிலிருந்தவர்களுக்கு ஆச்சரியத்தையும், தொப்பி தரித்தவருக்கு அவமானத்தையும் விளைத்தது.

---

இரண்டுவருடம் கடுங்காவற் றண்டனை யடைந்தவர்:—கல்கத்தாவி லுள்ள உஸ்மானி அச்சுக்கூடத்தின் சொந்தக்காரரான சையத் மகமத் உஸ்மான் என்பவர் ராஜத்துவேஷமான துண்டுப் பத்திரங்களை அச்சாபீசின் பேரில்லாமல் வெளிப் படுத்தினர். அக் குற்றத்திற்காக அவர் மாஜிடிரேட்டுக் கோட்டில் 2-வருடம் கடுங்காவற் றண்டனை யடைந்தார்.

---

கொள்ளைக்காரர்களுக்கு நேர்ந்த விபத்து. மூவரிறந்தனர்:—கல்கத்தாவை அடுத்துள்ள பாரிஸா வென்னுமூரில் சிலதினங்கட்கு முன்னொருநாளிரவு சுமார் 10 கொள்ளைக்காரர்கூடி ஒரு வீட்டிற் பிரவேசித்து, அங்கிருந்த சாதாரணப் பெட்டிகளையும், தங்குப் பெட்டிகளையும் திருடிக்கொண்டு சென்று, ஒருமறைவான இடத்தில்வைத்துத் திறந்தனர்; மிகவிருட்டாயிருந்தமையால், ஒருநெருப்புக்குச்சி கிழித்து அவற்றிலுள்ள பொருள்களைப் பார்க்கும்போது, அக்குச்சிநழுவி, ஒருபெட்டியினுள் விழுந்தது. அதனால் அதிலிருந்த வெடிக்குண்டுகளும், வெடிமருந்துகளும் வெடித்தன. அவ்வெடியால் அவர்களுள் மூவரிறந்தனர்; பலர் காயமடைந்தனர். அப்பெட்டிகளுள் ஒன்றில் வெடிமருந்தும், வெடியுப்பும், சிலபாணங்களும், இரண்டு மூன்று வெடிக்குண்டுகளும் வைக்கப்பட்டிருந்தனவாம்.

---

அச்சாபீசும் ஜாமீனும்:—லூடியானுவிலிருக்கும் சிவில் மிலிட்டரி ஆர்கன் அச்சுக்கூடத்தார் ஆல் இஸ்லாம் என்னும்விருத்தமான பத்திரிகையைப் பிரசுரஞ்செய்தமையின், அது இரண்டாயிரம்ருபா ஜாமீன்கட்டவேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கின்றனர். ராஜாங்கவிரோதமான விஷயங்களைப் பிரசுரஞ் செய்யும் பத்திராசிரியர்களையும், அப் பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்யும் அச்சாபீஸ் காரர்களையும் அடக்குவது நியாயமேயாம்.

---

ஏழுவருடம் கடுங்காவற் றண்டனை யடைந்தவன்:—வட இந்தியாவில் பொலீஸ் அஸிஸ்டெண்ட் சுப்பரின்டென்டைச் சுட்டுக்கொல்ல முயன்ற காரணத்தால் சிங் என்பவன் 7-வருடங் கடுங்காவற் றண்டனை யடைந்தான்.

---

முதலையால்நேர்ந்த விபத்து:—வங்காளமாகாணம் டக்காஜில்லாவைச்சேர்ந்த பத்மாவதி நதிக்கரை யோரமாயுள்ள குணக்கிராம் என்னும் கிராமத்தில் வசிக்கும் மோட்டார்வண்டி விடும் சுரேஷசந்திர என்பவன் ஒருநாள் தன்வீட்டிற்கருகே அந்நதியில் ஒருகட்டை மிதக்கக்கண்டு, அதனையெடுக்கச்சென்ருன்; அப்போது ஒருமுதலைவந்து அவனைப்பிடித்துக்கொண்டது. அவன் அதனோடு போர்செய்து, அதன் கண்களைத் தன்விரல்களால் குத்தி அம்முதலையினின்றும் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டான்: ஆயினும் அவன் அன்றிரவே ரணகாயம் பொறுக்கமுடியாமல் இறந்துபோனன்.

---

## யுத்தம்.

அருஸ் என்னுமிடத்தில் பிராஞ்சிய பீரங்கிகள் சேர்மனியரின் யூகங்களைக் குழப்பிவிட்டது. சேர்மனியர் நச்சுக்குண்டுகளை எறிந்தும் சம்பேயின், சுபேயின், பேர்தேசஸ் என்னுமிடங்களில், தோல்வியடைந்தனர். ஆர்கோவில் அனேக சேர்மன் அகழிகளைப் பிராஞ்சியரது பீரங்கிகள் அழித்துச் சேர்மனியரைச்சின்னபின்னமாகக் கலைத்துவிட்டன.

ஆகாயக்கப்பல்கள், வலன்ரயினில் சேர்மனியரின் புகைரதப்பாதைகளை யழித்து, ஓர் வண்டியையும் உடைத்துப் போட்டன.

போயிசிங்னில் சேர்மனியர் குண்டு மாரிபொழிந்தும், பிராஞ்சியரால் துரத்தப்பட்டார்கள். பிராஞ்சியர் இவ்விடத்தில் சேர்மனியரின் ஆயுதசாலையையு மழித்து, சேனைகளின்மீதும் குண்டுகளைச் சொரிந்தார்கள்.

மான்கோஸ் என்னு மிடத்தில் சேர்மனியர் எதிர்த்துச் சண்டை தொடுத்து முரிந்துபோயினர்கள்.

லூஸ், பப்லக் என்னு மிடங்களில் பிரித்தானியர் சேர்மனியரை யெதிர்த்துச்சண்டைசெய்தார்கள். வட அருஸ் என்னு மிடத்தில், பிராஞ்சியரும், இங்கிலிஸ்காறரும் சேர்மனியரோடு கடும்போர்செய்து கொஞ்சஇடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். பெல்சியன்கரை இங்கிலிஸ்கடற்படை தாக்கினது.

ருஷியா அவுஸ்திரியரிட மிருந்து லஸ்க் என்னு மிடத்தைக் கைப்பற்றி 4000-ம் பேரைக் கைதிகளாக்கினர்கள் அதன்பின் அதற்குத் தென்மேற்கிலுள்ள இரண்டு கிராமங்களும் ருஷியர் கைவசப்பட்டன.

கிலேய்க்யாவில் ருஷியர் சேர்மனியரைத் துரத்தி, அதையுங் கைப்பற்றி எட்டுப்பீரங்கிகளையும், ஒன்பது பீரங்கி வண்டிகளையும், வேறு ஆயுதங்களையும் கைப்பற்றினர்கள்.

நோவோ அலெக்சாண்டி ரூேவ்ஸ்க என்னுமிடத்தில் பெருஞ்சண்டை நடக்கின்றது.

லொக்னிசயின் என்னும் பட்டினம் ருஷியர்வசமாயிற்று.

லக் என்னு மிடத்தில் மூழுகிலும் ருஷியர்வசப்பட்ட கைதிகள் 6128.

சேர்மனிய ஆகாயக்கப்பல், நீராக்குடாவிற் றூன்றின. ருஷியர் அவைகளைச்சுட்டுத் துரத்திவிட்டார்கள்.

இத்தாலியர் அவுஸ்திரியரைச் சுற்றிவளையமிட்டார்கள். அவுஸ்திரியர் இருபிரிவாய்ப்பிரிந்து ஓடப்பார்த்தார்கள் கடைசியில், இத்தாலியர்தானத்தைப் பிடிக்க 123—பேர் கைதிகளாகினர்கள்.

நடபரசுகள் தற்காலம் எவ்விடத்துஞ் ஜயமடைந்து வருகின்றனர். இரண்டு நாள்களில், இங்கிலிஸ், பிரான்சியசேனைகள், சேர்மனியரோடு பெரும் யுத்தஞ்செய்து அவர்களை அகழிகளினின்றும் துரத்தி அகழ்களையும்பிடித்து (20,000) இருபதினாயிரம்பேர் வரையிற் கைதிகளாக்கினர்கள். மருந்து குண்டு பீரங்கிகளும் நடபரசுகளின் கைவசமாயின. இன்னுஞ் சரியான கணக்கு எட்டவில்லை. ருஷியரும் கிழக்குப்பக்கத்தில் பெரும் யுத்தஞ்செய்து நாளுக்கு நாளாகச்செயமடைந்துகொண்டேவருகிறார்கள்.

பல்கேரியர் தாங்க ளணிவகுத்தது சண்டைக்கல்ல, தங்கள் பாதுகாப்பின் பொருட்டேயென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். தங்கள் தேசத்துக்கூடாக வேற்றரசர் சேனைகள் செல்லுந் தருணத்தில் தாங்கள் அவர்களைத் தடுப்பதற்காகத்தான் அணிவகுத்ததென்று சொல்லுகின்றார்கள்.

வொன் மேல்ற்க் என்னும் சேர்மன் படைக்கப்பல் பழுதடைந்தது. அதைப் பழுதுபார்க்கச் சிலமாசங்கள் செல்லுமென்று கேள்வி.

---

## கடிதங்கள்.

### செல்வமும் வறுமையும்.

——(:0:)——

முன்னே சுட்டியவினையின்பயனுகச், சிவபெருமானல் அமைக்கப்பட்டவாறு, ஒருவர் தாம் பெற்றுள்ளபொருள், பெரிதேயாயினுஞ் சிறிதேயாயினுமென், அதுவேதமக்குப்போதிய நிறைவான பொருளேயாமெனு, மனப்பூரணதிருத்தியடைந்திருத்தலே செல்வமேயாமெனவும், எத்துணைக்கோடி தொகையான பெரும் பொருளொருவர்க்குக் கிடைக்கப்பெற்றிருப்பினும், அதனல்மனத்திருத்தியடையாது தமக்கொன்றும் இல்லையில்லையேயென்று அவாக்கொண்டிருத்தலே வறுமையேயாமெனவுங் கொள்ளப்படும். அதுநோக்கி

யன்றே, நங்குமரகுரு பரசுவாமிகளும், "செல்வமென்பதுசிந்தையினிறைவே-பல்காலல்குரவவாவெனப்படுமே" என அருளிச்செய்தனர். அதனை, ஒரு சரித்திரத்தைக்கொண்டு இங்கே சிறிதுவிளக்கிக்காட்டுவாம்.

கல்வியினாலும், விவேகத்தினாலும், வலிமையினாலுஞ் சிறந்து, குடை கொடி முரசங்களோடு தனதாணையைத் திசைகளிலே செலுத்திச், செவியிற்கண்டு, கண்ணிற்கூறிப், பொதுநீக்கி அரசாட்சிசெய்துகொண்டு, மிக்க சீர்த்தியோடு ஓரரசன் ஒருரிலிருந்தனன். அப்பொழுது, அவன், அயலூரின்கணுள்ள வேறோரரசனது செல்வம் முதலியவற்றை நோக்கியபொழுது, தனது செல்வம் முதலிய அனைத்தும் மிகச்சுருங்கித்தோன்ற, அதனைக்கண்ட மாத்திரையே, தான்மிக்கதுக்கசாகரத்தழுந்தி, அழுக்காறுற்றவனாகிப், பின்னர், அவனினுந்தானே மேம்பட்டவனாக வருதற்கேற்ற வழிகளை ஆராய்ந்து, உணவின் சுவையை வெறுத்தும், துயிலின்சுவையைத் துறந்தும், மாணிழைமகளிர் தோணலந் துறந்துஞ், சிறுகாற்று வழங்காப் பெருமுச், செறிந்தும் இங்ஙனமேயாய பெருந்துயசாகரத் தமிழ்ந்தி வருந்தினனாயினன்.

அவ்வரசர்களிலே இங்ஙனமேயாக அவ் வூரிற்றானே, காட்டிலே விறகுவெட்டி, ஊர்கடோறுஞ் சுமந்து திரிந்து விற்றுக்கூலிபெற்றுச், சீவனஞ் செய்து காலங் கழிக்கும் மற்றிரு விறகுதலையருமிருந்தனர். அவருளொருவன், முயற்சியோடு தான்போய் வெட்டிச் சுமந்துகொண்டு திரிந்த விறகை விற்றுப் பெற்றுக்கொண்டுவந்த கால் ரூபாவைக்கொண்டு செலவுசெய்து, புற்கையும் இலைக்கறியும்வாங்கிச்சமைத்துத், தன் மனைமக்களோடுண்டு களியாட்டயர்ந்து, அன்று விறகுக்குச் செல்லாத மற்றைய விறகுதலையன் உணவுக்கு வழியின்றித் தானுந் தன்மனைமக்களுமாகப் பசியினால்வாடி வருந்தலுற்றிருத்தலை நோக்கி, முயற்சியில்லாத அவனை விழித்திகழ்ந்து, அன்று தனக்கியாதுங் குறைவொன்றின்மையினாலே, தனக்கிணையாருமில்லையேயென்று தன்னைப்புகழ்ந்து மகிழ்ந்து, யாதொருகவலையுமன்றி, மிக்க மனநிறைவோடிருந்தனன்.

இதனால், செல்வ வறுமைகளுக்கு அவாவுண்மையும் அவாவின்மையுமாகிய இரண்டுமேயன்றி, வேறோரளவு மில்லையென்பது தானே பெறப்படுகின்றது. அது, "ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டியாளினுங் கடன் மீதிலே யானைசெலவே நினைவரளகேசனிகராக வம்பொன் மிகவைத்தபேரும்-நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்" என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கினாலும், பிறஆன்றோர் வாக்குக்களினாலும் பெறப்படும். பெருஞ் செல்வர்களையெல்லாங் கெடுப்பது பேராசையொன்றேயாம். "ஆசைக்கடியா னகில லோகத்தினுக்கு-மாசற்ற நல்லடியா னவனே" என்னும் மேலோர் வாக்கும் இங்கே சிந்திக்கற்பால தொன்றேயாம். இவ் விஷயத்தைக் குறித்துப் பின்னரொருமுறை விரித்து விளக்கிக்காட்டுமாறு உத்தேசித்திருக்கின்றோம். செல்வப்பிரபுக்களாவுள்ளவர்கள். தயைபுரிந்து இவ்விஷயத்தைச் சிறிதூன்றிச் சிந்திக்குமாறு அவர்களை அன்போடு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
சு. சரவணமுத்துப்பிள்ளை,
உதயபானு பத்திராதிபர்,
நல்லூர்.

---

### சனங்கள் என்னபேசிக்கொள்ளுகிறார்கள்?

(:0:)

திருநெல்வேலி வடக்கிலே வசிக்கும் ஐங்குடியை வைத்தாளும் பொன்பற்றியூர் வேளாளகுலோத்தமர்கள் ஒருங்கு சேர்ந்து "சிவஞானதான வித்தியாசாலை" என்னுஞ் சைவவித்தியாசாலைக் கட்டடத்தைப் பாதிரிமாருக்கு எழுதிக்கொடுத்து மேன்மைபெறப் போகிறார்களாம். இனி அவ்வூரிலுள்ள சைவசமயக் கோவில்களையும் பாதிரிமாருக்கு விற்றுவிட்டால் தங்கள் பூசைமுறைக்கு மோசம்வருமென் றஞ்சி பூசகர்கள் நூலைச் சட்டைக்குள் மறைத்துக்கொண்டும் முன்தலையைச் சிரைப்பாவாகவும் பின்தலையைக் குடுமியாகவும் வளர்த்துக்கொண்டும் பைபிள்படிக்கிறார்களாம்.

பகலிராமாசினைதவங்காற் படுத்து றங்குமிட மாக்கலாம் என்றெண்ணி முத்துத்தம்பி செத்தும் இன்னும் அவன்பேர் வளங்குவதேன் என் றெண்ணியோ சைவசிகாமணிகள் இந்தவேலை செய்கிறார்களென்றும் பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடையர் என்றதுபோல சாதிபேசுவதும் சமயம்பேசுவதும் வாயளவுதான் என்றும் பழஞ்சந்தையடிப் பாற்காவடிமடத்திற் சிலபள்ளர் பேசுகின்றார்களாம்.

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலிலே இந்தவருஷம் ஆடவர்சண்டை நடவாமையால், அங்கே யஷயழிக்கப்போன பெண்கள் சங்கங்கூடி ஆயத்தப்படுத்திப் பங்கம்பிரிந்து அங்கம்புரிய அடிபட்டு ஒருவாறு அக் குறையை நிறைவேற்றினார்களாம்.

ஒரு பன்னம் பரியபள்ளிக்கூடத்திலே கொம்மட்டி கூடுகிறார்களாம் ஒரு சைவ இங்கிலிசுப் பள்ளிக்கூடத்திலே கணக்கில்லையாம். கணக்கு எங்கேயென்று கேட்டால்வருடாவருடம்சோதனைகாரன் கொண்டுபோய் விடுகிறான் என்கிறார்களாம்.

கணக்குச்சோதினைகாரன் ஒருமுதலியாராம். அவர் கணக்குச்சோதிப்பதில் நிபுணராம்.

ஒரு இந்த அங்கிலகலாசாலையில் அனேகம் ஆடவர்கள் கூடினார்களாம் கூடியும் புதிதாய் ஒருவரையும் பெறவில்லையாம். எல்லாரும் இருந்தபடிதானாம்.

கணக்குச்சோதினைகாறன் கன்பிழை பிடித்துக் கணக்கு எழுதின கடுதாசியை கையிலே நீட்டினாராம். நாற்காலி மனிதன் அதை வாங்கிச் சட்டைச்சாக்கில் ஒட்டிக்கொண்டுப் பின்னைக் காட்டுமென்றாராம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவவதாரவிசாரம் என்ற விஷயத்திலே சாரமில்லையாம். எல்லாம் வெறும் விசர்க்கூத்தாம். "ஓகோ ஆமையென நினைந்தான்போலும்" என்றதுபோலக் கிடக்காம்

ஈழமண்டல சதகத்திற்குச் சிறப்புப் பாயிரங் கூறத்தக்க வித்துவான்கள் இவ்வுலகில்லை தானேயென்று மதுகோதண்டத்திற் சிலமடைத்தையர் புகழ்ந்தார்களாம்.

பிறக்கிராசியா ரொருத்தர் கொம்மட்டிச் சக்கறுத்தாராம். நெடுக அவர்தானும்.

இரண்டுவருடத்திற்குமேலே கொம்மட்டியில் ஒருவர் குந்திக்கொள்ளக் கூடாது என்று வாதாடி வல்லடி வழக்குப் பேசின பிறக்கிராசியார் தானே மறந்துபோயாக்கும் நெடுகக் குந்திக்கொண்டாராம்.

கணக்குச் சோதனைகாரன் நடுவிலே முரித்துக்கொண்டு போய்விட்டாராம்.

போனாலும் அவரைச் சந்தோஷப்படுத்த அவருடைய வேலையை அவருக்குத்தான் வைத்தனுப்பியிருக்கிறார்களாம்.

கோபித்துக்கொண்டு போனவருக்கு வேலை யனுப்பினபடியாற் கள்ளம் எவரிடத்திலிருக்கிறது என்று இளங்குக்காறிகள் கதைக்கிறார்களாம்.

பட்டணத்திலேயுள்ள படித்தவாலிபர்களும் மீசையரும்பின தாணிமாரும் தாங்கள் கொம்மட்டியிற் குந்தியிருக்குங் காலம் எப்போவருமென்று கொட்டாவி விட்டுத் தங்களுக்கு இடம் ஒழிவித்துத் தருமராஜாவுக்கு மனுப்பண்ணப்போகிறார்களாம்.

ஒவ்வொருவருக்கும் அரைப்படி ஆமணக்குநெய் கொடுக்கும்படி வாணியமாரிக் குத்திரவுவருமாம். மகாமேரு அசைந்தாலும் கொம்மட்டியி லிருப்போர் இடம்விட்டு மாறமாட்டார்களாம். நிலாவரையி லிட்டபொருள் கிடைத்தாலும் கணக்குப் பிழை வெளிக்கு வராதாம்.

இங்ஙனம்
க—ச—புழுகு சிங்கம்.

---

### யாழ்ப்பாணத்து நல்லூரைச்சேர்ந்த நாயன்மார்கட்டு வைத்தியசிரோமணியாகிய ஸ்ரீமத் வெ. மயில்வாகன பண்டிதர்

(:0:)

யாழ்ப்பாணத்து நல்லூரைச்சேர்ந்த நாயன்மார்கட்டு என்னும் ஊரையே சனனவூராகக்கொண்டிருந்து வைத்தியஞ்செய்து பெரும்புகழ்படைத்த வைத்தியசிரோமணியாகிய ஸ்ரீமத். மயில்வாகனபண்டிதரவர்கள், ஸ்ரீமான்! சுப்பிரமணியமுதலியாரவர்கள் மரபிலே, ஸ்ரீமான். ஆறுமுகப்பிள்ளையவர்கள் தவத்தாலுதித்து, அக்காலத்திலே வைத்தியத்திறமையினாலே பெரும்புகழ்படைத்துள்ளவரும், தேவியின அனுக்கிரகம் பெற்றுள்ளவரும், அன்னதானம் சிவத்தலயாத்திரை முதலியவற்றிலே சிரத்தைபெற்றுள்ளவருமாகிய, ஸ்ரீமான் வெற்றிவேற்பிள்ளை வைத்தியரவர்கள் புரிந்த அரிய தவத்தாலுதித்த சேட்புத்திரரவுள்ளவர். நல்லொழுக்கம் சைவாசாரம் சிவபத்தி சீவகருணைமுதலிய நல்லிலக்கணங்களமையப்பெற்றுள்ளவரும், வைத்தியத்திறமையினாலே தமக்குத் தம்பிதானென்று உள்ளபடி சொல்லத்தகுஞ் சிறப்புவாய்ந்துள்ளவருமாகிய, ஸ்ரீமான். சிவ சுப்பிரமணிய வைத்தியரவர்களைத் தமக்குத் தம்பியாகப்பெற்றுள்ளவர்.

தமது சனனதேசமாகிய யாழ்ப்பாணத்துமாத்திரமேயன்றி, இவ் விலங்கையைச்சேர்ந்த கொழும்பு கண்டி முதலிய இடங்களிலேயுள்ள அனேகருக்கும். இந்தியாவைச்சேர்ந்த சோழ பாண்டிய தேசங்களிலேயுள்ளவர்களுக்கும், ஆங்கிலபூமியிலேயுள்ள ஆங்கிலேயர் சிலருக்கும் வைத்தியஞ்செய்து, பிறரெவரிடத்தாவது அமையப்பெற்றிராத வைத்தியத்திறமையைக் காட்டிப் பெரும்புகழ் படைத்துள்ளவர். வைத்தியத்திலே மிக்கதிறமுடையாரெனப் பௌத்தர், கிறிஸ்தவர், மகமதியர்முதலிய பலசமயத்தாராலும் மதிக்கப்பெற்றுள்ளவர். சத்திர வைத்தியத்திலே மிக்கதிறமைவாய்ந்துள்ள ஆங்கில வைத்தியர்களெல்லாங் கண்டு ஆச்சரியமுற்றுத் திகைக்கிட்டேங்குமாறு, அஞ்சாத சிங்கேறுபோலும் மிக்க துணிவோடு நின்றுபுரியும் அரிய சத்திரவைத்தியத்திறமையிலே, தமக்கொப்பாரும் மிக்காருமில்லாது சிறந்துள்ளவர். சுதேச வைத்தியத்தை இழிவுபடுத்தி, ஆங்கிலவைத்தியர் தலையெடுத்தோங்கிவருங்காலத்திலே, அவ்வாங்கில வைத்தியத்தையே இழிவுபடுத்திக், கடவுளாலும் அவரருள்வழிப்பட்டோராலும் அருளிச்செய்யப்பட்டுள்ள சுதேசவைத்தியமொன்றே மிக மேலாய விசிட்டம்பெற்றுள்ளதெனை யாருங் கண்கூடாகக் கண்டு மகிழுமாறு தாமேயதனைச்செய்துகாட்டி, இப்பொழுதுநடைபெற்று வருவதாகிய பிரபலவைத்தியசாலையைத், தமதுசனனவூராகிய நாயன்மார்கட்டிலே நாட்டி. அதனாலே மிக்க கீர்த்திவாய்ந்துள்ளவர். முரிந்துபோன அவயவங்களைத் திருத்திப் பழையபடியிலேக்குக் கொண்டுவரும் வினைத்தறகரிய சமர்த்தினாலே, சிருட்டித்தொழில் புரியும் பிரமதேவரின் அவதாரமேபோன்றுள்ளவர்.

இனிச், சமயவிஷயங்களைக்குறித்து வாதித்துப், பரபக்கங்களைக்கண்டித்துச், சுபக்கஸ்தாபனஞ் செய்தலிலேயும் அவர் பெருஞ் சமர்த்து வாய்ந்துள்ளவர். எவ்விதவிஷயங்களினுநுழைந்தாராய்ந்து, உண்மைகண்டு பிடித்தலிலே, குசைநுதிபோலுங் கூரிய மதியுடையவர். சைவாசாரம், ஒழுக்கம், ஈசுரபத்தி முதலியவற்றிலே சிறந்து, சிவபூசாதுரந்தரராக உள்ளவர். குருபூசைமடமொன்றைக் கட்டுவித்து, அதிலே, சமயகுரவர்கள் முதலிய நாயன்மார்க்குத், தவறாது முறைப்படி குருபூசையை நடத்திக்கொண்டு வந்தவர். எப்பொழுதுந் தவறாது தமிழ்வேத பாராயணஞ் செய்து கொண்டுவந்தவர். நடராசபெருமானது குஞ்சிதபாதநிழலையே யடையக்கருதிச், சிதம்பரத்திலே பலகாலமாக வசித்திருந்தவர். சத்திரவைத்தியத்திலே திறமுடையராகிய ஸ்ரீ. சோமசுந்தரப்பிள்ளையவர்களைப் புத்திரராகவும், மீனும்பிகை, வாலாம்பிகை என்னும் இருபெண்களையுந் தமக்குப் புத்திரிகளாகவும் பெற்றுடையவர். இடசித்தத்திலும், விவேகத்திலும், ஞாபகசத்தியிலும் மிகச்சிறந்துள்ளவர். இங்ஙனமேயாய குணஞ்செயல்களினாலே, தமக்கொப்பாவார் பிறரிலரெனத் தக்கதாகத் தாம்பிறந்த திசைக் கிசையையிறுத்தித், தமது வைத்தியசாலையையும், வைத்தியத்தையும் என்றும் நடைபெறுமாறு, தமதரியசகோதரராகிய சிவ சுப்பிரமணிய வைத்தியரவர்களிடத்தும், புத்திரராகிய சோமசுந்தரப்பிள்ளையவர்களிடத்துங் கையடையாகக் கொடுத்து. மறவாத சிவத்தியானத்தோடு, மாணிக்கவாசகசுவாமிகள் நடராசப்பெருமானோடிரண்டறக்கலந்தருளிய தினமாகிய, ஆனிமாத மகநட்சத்திரத்துச் சுக்கிரவாரத்துச் சூரியோதயத்திலே, பூர்வபட்சத்துச் சதுர்த்தசி திதியிலே, சென்மநட்சத்திரமும் இலக்கினமுமதுவேயாக வந்துபொருந்தச், சிவபதமடையப்பெற்றனர்.

இங்ஙனம்,
ஒருநண்பன்.

---

### வண்ணைவைத்தீசர் ஒருதுறைக்கோவை உரை.

நலப்படு வேட்டுவன் கண்ணனி நாதன் குறைவில் வண்ணை, யலப்பறு வேல்விழி யானே விறையவ னுரனிச்த. உலப்பறு காவியத் தோடுசின் நீசிஃ துண்மையினிச், சிலப்பதி காரத்தைப் பார்ப்பே னெப்போதுஞ் சிறநதலே.

இ—ள். குலப்பதி வேட்டுவன்-வேடர்குலத்திலே திருவவதாரஞ்செய்த தலைவராகிய கண்ணப்பநாயனார், கண் அணி நாதன் குறைவு இல் வண்ணை-இடந்தப்பிய கண்ணையணிந்த கடவுளது அருட்செல்வம் நிறைந்த வண்ணைமாநகரில், அலப்பு அறு வேல் விழியானே-அளவிடு தற்கரிய வேல்போலுங் கண்களையுடைய னே,இறையவன் ஆர் அளித்த உலப்பு அறு காவி-பிரமதேவரால் மேம்படுடையதாகத் தந்த செவ்வி நீங்குதலில்லாதனகளாகிய நீலோற்பல மலர்கள், அத்தம் ஒடுசின் நீர்-கைகளோடு பொருந்தி மறையப்பொருந்தி நிற்கின்றீர், சிற நுதலே-சிறிய நுதலையுடையானே, இனி எப்போதும் சிலம்பு அதிகாரத்தைப் பார்ப்பேன். இனி யெக்காலும் தனமலைகளின் பூரித்தலை யான்காண்பேன், இஃது உண்மை-நான்சொல்லுமிது மெய்யாகும். எ—று.

ஏகாரங்க ளிரண்டும் விளிப்பொருள். காவியும் சிலம்பும் உருவகவிசேடம். குலமுதல்வரான திண்ணனாரது அன்பின்பெருக்கம்பிறர்க்கும்புலப்படக் கண்ணை அணிந்த நாத என்பார், குலபதிவேட்டுவன் கண்ணணிநாதன் என்றார். இனி "இறையவனாரளித்த உலப்பறு காவியத்தோடு இன்றீர்" என்பதற்கு-இறையனார்செய்தருளிய கெடுதலற்ற அகப்பொருள் நூலின் துறையொன்றனோடு நிற்கின்றீர், எனவும், "சிலம்பதிகாரத்தைப் பார்ப்பே" னென்பதற்கு, பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தை யான் பார்ப்பேனெனவும், தலைவன் கூற்றாகப் பொருள்கொள்ளவைத்தலால், இது விதிமொழிச் சிலேடையென்னும் அலங்காரம். (31.)

நடுப்படு பொய்யெனும் வாவாம் பிகைபங்கன் நன்னும் வண்ணை, மடுப்படு சேல்விழி மாதே யிரங்கி யிம் மாரனம்பு, வடுப்படு புண்ணினை மாற்றச் சஞ்சீவ வரையளிததீர், கடுப்பொடு பாயுஞ் சரத்தையு நீக்குதல் காருண்யமே.

இ—ள். நடு படு பொய் எனும் வாலாம்பிகை பங்கன் நன்னும் வண்ணை-இடையைக்குறியான பொய்யென்று கூறும் வாலாம்பிகையைவாமபாகத்திலுடைய வயித்தீசுரப்பெருமான் வீற்றிருக்கும் வண்ணைநகரில், மடுப்படு சேல விழி மாதே-நீர்பெற்ற நீரிலுள்ள சேல் மீன்போலும் கண்ணையுடையபெண்ணே, மாரன் அம்பு வடுப் புண்ணினை மாற்ற-மன்மதபாணத்தாலுண்டாகிய வடுப்பட்ட புண்ணை மாற்றும்பொருட்டாக, இச் சஞ்சீவி வரையளித்தீர்-இச்சந்தனமாகிய சஞ்சீவிமலையைக்கண்கூடாகப் புலப்படத்தந்தீர், கடுப்பு ஒடு பாயும் சரத்தையும் நீக்குதல் காருண்ணியம்-இனி வேகத்தோடு செல்லும் பாணத்தை நிகர்த்தகண்ணையும் மறைத்தலினின்று நீக்குதலே அன்பிற்குரிய செயலாகும்.

இடையின் நுண்மைமிகுதிதோன்ற நடுப்பொய்யென உருவகித்துரைத்தார். ஒடு கோபத்தோடு வந்தான் என்பதுபோல அடைமொழிப்பொருட்கண் வந்தது. சரத்தையும் என்பதில் உம்மை எச்சம். கண்ணுக்குப் புலப்பட்டதனம் மதனநோயை ஒருவாறு நீக்குதலின் சஞ்சீவிமலையெனவும், எதிர்ப்பட்டோரைத்தப்பாது தாக்குதலின், கண்களைக் கடுப்பொடுபாயுஞ் சரமெனவும், ஒப்புமைப்பொருண்மை தோன்றத் தலைவன் கூறினனென்பது கருத்து. (32)

இங்ஙனம்
தி. கிருஷ்ணபிள்ளை உபாத்தியாயர்.

---

### அறிவித்தல்

சண்முகநாதன் அனுபந்தத்தில் 1915-ம் ஆடு அக்டோபர்மாதம் 2-ந் தேதி விற்கும் நகைவிற்பனவை, வெந்திஸ்மேஸ்தர் ஷை மாதம் 9-ந் திகதி விற்கும்படி மாற்றியிருக்கின்றார் என்பதை அறிவிக்கிறோம்.

இங்ஙனம்,
வை. சண்முகம்.

# விளம்பரங்கள்.

## டைனமைற் வெடி

என்னிடத்தில் திறமான கழுகு மார்க்கு போட்ட டைனமைற் வெடி விலைக்கிருக்கிறது. விருப்ப முள்ளவர்கள் என்னிடத்தில் வந்து விலை விபரம் முதலியவற்றை யறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்
ந. சினனத்தம்பி.
டைனமைற் வெடி வியாபாரி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## இந்தியாவில் பெரிய வேலைச்சாலை, பிஜோலிபுளூட் ஆர்மோனியம்

நிஜில்தேட் நம்பர் 116, 3 ஆ உத்தரவாதம்.

இந்த ஆர்மோனியம் எங்கள் வேலைச்சாலையில் கைதேர்ந்த அநுபவசாலிகளால் எங்கள் மேற்பார்வையில் செய்யப்பட்டது, பெரும்பாலும் தேக்கமரத்தினுற் செய்யப்பட்டிருக்கிறது. மற்றச்சாமான்கள் முதற்றரமானவைகளாய்ப் பரிசிலிருந்து அழைப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தொனியும் இனிமையுந் திறமுமானதென நாங்கள் உத்தரவாதஞ்சொல்லுகிறோம். கற்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

பழகுகிற புளூற் ரூபா 15.

| | | | |
|---|---|---|---|
| 3 ஒக்டேவ் 1 செற்றிட் | | | |
| ,, 3 ஸ்றப் | | ரூபா | 17-20-25 |
| 3 ,, 2 ,, 4 | | ,, | 26-30-35 |

மடிக்கக்கூடியதும் காலாலும் கையாலும் பாவிக்கக்கூடியதும்.

| | | | |
|---|---|---|---|
| 3 ஒக்டேவ் செற்றிட் | | | |
| 3 | ஸ்றம் | ரூபா | 40-45-50 |
| 3 ,, 2 | ,, | ,, | 60-65-70. |

ஆடர் அனுப்பும்போது முற்பணமாக ரூபா அனுப்பவேண்டும். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

S. கெஷிம் அன்கம்பனி
426–ஹறிசன்றோட்,
C. P. கற்குத்தா.

## ஜவான்சூறணம்.

சீரணிக்கச் செய்யும் மருந்து

(1.) மின்சார தத்துவத்தால் பக்குவப்படுத்தப்பட்டதும், சமுசாரிகளுக்கு மிகப் பிரயோசனமுமாகியது.

(2.) எதுவிதமான அசீரணக்குழப்பமும் அற்றுப்போம். சாப்பிட்டதின்பின், தினமும் இச்சூறணக் குளிகையில் ஒவ்வொன்று உட்கொண்டுவந்தால் அசீரணம் ஒருபோதும் வராது.

சூறணம் விலை—100 (செப்பு ஒன்றுக்கு அணு 8. தபாற்செலவு அணு 3. 3-செப்பிற்கும் தபாற்செலவு இதுவே.

**S·KESHIM & CO,**
**BIJOLEE FLUTE MANFACTURER**
**42-6 HARISON ROAD**
**C.P ·CALCUTTA**

## நோட்டீஸ்.

கனவான்களே,

அடியில் கையொப்பம் போட்டிருக்கிற என்னிடத்தில் விலை சரசமாயும், நிறுசுகள் கோட்டமாயும், அழுத்தமுள்ளதாகவும் கிடைக்கும். ஜரி கைவேலைமானஞ்செய்த பீதாம்பரசேலைகள், வேடி 10×6 வேஷ்டிகள் 7, 8-முழம் குழந்தைகள் பச்சாணு, சச்சவுக்கம், உறுமால், இலேஞ்சு இவைகளும், காசிவயிரவர்கயிறு, குழந்தைகள் விளையாடும் பித்தளை விளையாட்டுச் சாமான, ருத்ருக்ஷமாலைகள், மடிதாவளிகள், கான்பூர் போர்வைகள் இவைகளெல்லாம் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும் இன்னும் காசியில் கிடைக்கக்கூடிய சகல சாமான்களும் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும். கூடிய சீக்கிரத்தில் கிரய ஜாபிதா வெளியாகும்.

இப்படிக்கு,
தங்கள் அன்பன்,
சர்மா அண்டுகோ,
அனுமான் காட்,
ஸ்ரீகாசி.

## அசாதி ரோகங்களுக்குப் பிரதிக்ஷ ஔஷதம

இப்போது கொஞ்சககாலமிருந்து உத்தமபூமியாகிய காசிநகரதத்திற்கு சமீபம் பாகிரதி கங்கைஓரத்தில் நமது ஜன்மபூமியாகிய கான்பூர்நகரத்தில் நமது புத்திரன் புத்திரி பந்துஜனங்களுக்கு நன்குய்க் கற்றுக்கொடுத்து நல்ல அநுபோகஞ்செய்து லோகத்தில் நம் நாமம் நிலைநாட்ட வேண்டுமென்று ஆவலாகி கான்பூரில் ஆதிஆயுர்வேத அரோககுதாகர் வைத்தியசாலை வைத்திருக்கிறேன். அதற்காக நம் மருந்தாவதுசரி நம்புத்தகமாவது சரி வேறு வாசனைத் தைலங்களாவதுசரி ஜரிகை பீதாம்பர பட்டுச்சால்வைகளும் பனாஸ் சேலைமுதலியஅனேக வஸ்துகளும் வேண்டிய வஸ்துக்கள் நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் ஓர் பெரிய ஆனந்தம்.

"பரமசிவனின் ஜடாவிலிருக்கும் கங்காதேவி பாகிரதி மெத்தக் கடினமாய்த் தவஞ்செய்து சிவனிடம் மன்றாடிக்கேட்டார் அப்போது சிவன் ஜடாவிலிருந்து ஒருசொட்டு கங்காசலம் சிவன் கருணைகூர்ந்து விட்டார் அந்த ஒருசொட்டில் மூன்று கங்கை உண்டாகினது ஒன்று ஆகாசத்திற்குப் போனது ஒன்று பாதாழலோகத்திற்குப் போனதுஒன்று பாகிரதிமஹாராஜன்மிர்த்துலோகத்தில் ஜனங்களுக்கு நன்மைக்காகக் கொண்டுவந்தார் மஹாராஜ சகர்ருள்ள 60 ஆயிரம் புத்திரர்கள் கபிலமுனிவர் சாபத்தினுல் சாம்பலாகிவிட்டார்கள் அவர்களுக்கு மோட்சங்கொடுக்க வேணடுமென்றுதான் பாதாழத்திற்குக் கங்கைபோனது மிர்த்துலோகத்திலுள்ள கங்கையிலுள்ள ஜலம் பாவிகளுக்கு ஒருசொட்டு முகத்தில்ப்பட்டால் பாவம் நீங்கி மோட்சமடைவார் அதிகம் எழுதவேண்டியதில்லை. அதிகம் அறியவிரும்புவோர் புராணங்கள் இராமாயணம் பார்த்துக்கொள்ளலாம். இது அனேக இலங்கைவாசிகளுக்கு அகப்படாததினுல் யான் கருணைகூர்ந்தது. யான் கங்கைக்கரையோரத்தில் இருக்கிறதினுல் நம்மிடம் மருந்து எடுக்குஞ் சகோதரர்களுக்கு மருந்துப்பார்சலோடு சிறிய சீசா ஒன்று இனமாய் அனுப்பப்படும்,

## சாதாவரி லேகியம்.

இந்த மோதகம் உத்திரகண்டத்தில் பத்திரிகாத ஆசிரமத்தில் ஓர் மஹாமுனிவர்வந்தார். அவர் லோகஜனங்களின்மேல் கருணைகூர்ந்து எனனில் தற்காலம் ஜனங்கள் அதிகமாய் மதுபானம் புசிக்கிறதினுல், அனேகம்பேர் சாராயம் அனேகம்பேர் கஞ்சா அபின் இவ்விதமாய் அனேகவித மதுபானஞ் சாப்பிட்டு கஷ்டமடைவது தெரிந்து சாஸ்திரத்தி லிருந்த பிரகாரம் இந்த லேகியத்தை நமக்கு உபதேசித்தார், மெத்தச் சீக்கிரம் தேசநன்மைக்காக வெளிப்படுத்தும்படி உத்தரவு கொடுத்தார், இந்த லேகியம் சாப்பிட்டால் கஞ்சா சாப்பிடவேண்டியதில்லை, இந்த லேகியம் அபினும் பார்க்கக் குணமுடையது. சாராயம் குடிப்பவர் இந்த லேகியம் சாப்பிட்டால் சாராயத்தினுடைய குணம் கொடுக்கும். அபின் சாப்பிட்டதினுல் என்னகுண மிருக்கிறதோ அந்தக் குணம் இந்த லேகியம் கொடுக்கும் இதற்கு மேற் குணங்களிருக்கிறது அதுதவிர மூலச்சூடு. இருமல். கைகால்வலி, இடுப்புவலி. வயிற்றுவலி. ஸ்திரீகளுக்கு கெற்பவாய்வு போன்ற ரோகம் 20-வகை பிரமேகம், நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்திகமாய்ப்போகுதல், ஆண்தன்மை யற்றவர்களுக்குக் சக்தியைக் கொடுத்து மேற்சொல்லிய வியாதிகளும் நிவிர்த்தியாகும். 84-வகை வாய்வு சூரியன்கண்ட பனிபோலநீங்கிவிடும். மலசலஞ்சுத்தமாகி நல்லபசியை யுண்டாக்கி இரத்தவிர்த்தி யுண்டாகி 7 வகைத்தாது அதிகப்படும். இந்த லேகியத்தில் அபின் கஞ்சா யாதொன்றுஞ் சேர்க்கப்படவில்லை. ஆயினும் ஆலமரம் ஜடாசக்காய் முதலிய இப்படி மருந்துகள் சாப்பிட்டால் சக்தியைக்கெடுத்து அபின கஞ்சாவி னுள்ளகுணம் கொடுத்து அதுகள் சாப்பிடவிருப்பமில்லாமலும்போகும், மேலுக்கு ஒரு கெடுதியும் சேரிடாது, கெட்டுப்போனசக்தி திருப்பக்கொடுக்கும். இது ஆண் பெண் இருவருள்ளும் பாவிக்கலாம், வியாதியில்லாதவர்கள் இந்த லேகியஞ் சாப்பிட்டால் மலஜலசுத்தி பசியதிகப்பட்டுப் போசனம் நல்லாய்ச் சாப்பிடலாம். அதினுல் நல்ல இரத்தசுத்தி யுண்டாகிச் சக்தியதிகப்படுத்தும் எவ்வளவு மச்சசல்ப்பட்டாலும் சரீரத்திற்கு வருத்தம் தெரியாது. இராத்திரியுள் அதிகம் கணமுழிக்கொடுக்கும் ஒருபத்தியமுமில்லை, கனவான்களும் ஏழைச்சனங்களெல்லாம் சாப்பிடவேண்டுமென்று அண்ணி காணதிகம்ரயம்வைக்காமல் உலகநன்மைக்காக மெத்தச் சகாயமாய் வெளிப்படுத்தினேன். லேகியத்தின் விலை ஒருறாத்தல் ரூபா 8. கால்றூத்தலுக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது. கால்றூத்தல் இருந்தாலுஞ்சரி அரைறூத்தல் இருந்தாலுஞ்சரி தபாற்செலவு பேக்கின்சார்ஜ் இனும்.

இனிமேலெடுக்கும் கனவான்கள் கொழும்புக்கு எழுதவேண்டாம். ஏனெனில் கொழும்பில் நான் வேலைகாரனுக ச. ஆறுமுகத்தை வைத்துவந்தேன். அவன் நமக்கு மாறாய் நடக்கிறதினுல் போலிமருந்துகள் விற்பாரெனறெண்ணி கொழும்பிலிருந்த வைத்தியசாலையை யெடுத்துவிட்டேன். நோராய் நம்மிடம் புத்தகமாவதுசரி மருந்தாவதுசரி கீழ்ச்சொல்லிய விலாசத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## கோகசாஸ்திரம்.

இந்தப்புத்தகம் லோகபிரயோஜனத்திற்காக சிலகாலம் இவ் லோகத்தில் நமது நாமம் நிலைநாட்டவேண்டுமென்று ஆவலாகி கோகசாஸ்திரம் கைத்தொழில்போதினி இன்னும் சில புத்தகங்கள் தகப்பன் பிள்ளைக்குச் சொல்லாத விஷயங்கள் தேசநன்மைக்காக வெளிப்படுத்தினேன். சூரியன் பிரகாசததினுல் சல சிவ ஆத்துமாக்களும் சுகமடைவதுபோல் மானுடஜெனம மெடுத்தவர்களுக்கு இந்தப் புத்தகம் அவசியமே எனெனில், வைத்தியசாஸ்திரம், வேதசாஸ்திரம், தர்மசாஸ்திரம் கைத்தொழில்ச்சாஸ்திரம், கொக்கோகத்தின் விஷயங்களும் மேற்சொல்லிய நூல்களின் சாரமெடுத்து செந்தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்தப் புத்தகத்தில் கோக்கோகத்திலுள்ள துர்விஷயங்களும் துர்ப்பாஷைகளும், துர்உருவங்களும் இல்லை. ஆனுலும் கொக்கோவத்திலுள்ள விஷயங்கள் ஸ்திரீபுருஷர்களுக்குப் படிக்கக்கூடிய சிறந்தபாஷையில் அச்சிடப்பட்டது. கற்பத்திலிருந்துபிறந்தகாலத்திருந்து மரணகாலபரியந்தம் மானுடர் செய்யும்விஷயங்கள் எல்லாங் கூறப்பட்டது. இந்தப் புத்தகத்தில் அடங்கிய விஷயங்கள் பத்திரிகையில் சுருக்கிக் கூறுகிறேன்,

ஸ்திரீ புருஷர் பேதாபேதமும் பொருத்தமும்
காலை மாலை செய்யுங்கருமங்கள்
ஸ்திரீபுருஷர் சரீரத்தில் காமதேவன்கழன றவரும் ஸ்தானததின் காலங்கள் விபரம்
பஞ்சபூதலக்ஷணம்
சரீரஇரக்ஷணவிதிகள்
பலஔஷதங்கள்செய்யும்முறை
சாம்பிராணிப்பதங்கம் கெந்தகம்கோப்பை செய்யும் முறை
நாக்குநேத்திரப்பரீக்ஷை
மூத்திரப்பரீக்ஷை
அனேக மிட்டாய்கள் லொசெஞ்ஜர் சர்பதுக்கள் செய்யும் முறை
சில இங்கிலீஷ்சென்ட்ல ரசவைத்திரவியங்கள்செய்யும்முறை
திறமான எடிக்கலோன் செய்யும்விதம்
வாணவேடிக்கைகள் செய்யும்விதம்
காபின்விஸ்கோத செய்யும்விதம்
பிரசவித்த ஸ்திரீகளுக்கு சரீரத்திற்கு கியாழம்செய்யும்விதம் இவ்விதமாய் அனேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றது. வாங்கிப் பார்த்தீர்களேயானுல் குரு இல்லாமல் விஷயங்கள் கற்றுக்கொள்ளலாம். இப் புத்தகத்தைப்பற்றி தமிழ்ப்பத்திரிகைகள் கூறுகின்றது. இப் புத்தகம் இலங்கை கவர்மேண்ட்டிடம் றிஜிட்டர் செய்யப்பட்டது. ஒருவரும் அச்சிடககூடாது. அப்படி அசசிட்டால் நமது நஷ்டங்களைக் கொடுக்கவேண்டிவரும். இப்புத்தகத்தின முன்விலை ரூபா மூன்று. தற்போது தேசநனமைக்காக, இரண்டரைரூபாவுக்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு அணு 4.

## கஸ்தூரித் திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒரு ஒயினகினாஸ் தண்ணீரில் விட்டுக் காலை, மாலை இரவு படுக்கும்போம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீரழிவினுல் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்று நாளையில் சுகமாக்கும். 40-நாள் மருந்துசாப்பிட்டால் வியாதி நன்றய்ச் சொஸ்தமாகும். தருணவயசடையவர்கட்கு இது மிகவும் கோர்த்தியான திராவகம். இதன் விலை அரை அவுனசுக்குக்கு ரூபா 10. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

## அஜ்ஜிபங்க தைலம்.

இதன் சிறந்த குணத்தை இங்கு விரிப்பின் மிகப் பெருகுமாதலால், என்னிடத்தில் சேரிவாவது, கடிதமூலமாயாவது விபர மறிந்துகொள்ளவும். ஒருஅவுன்ச தைலத்தின்விலை ரூபா 2. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளிகையில் தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 2-குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன் சுகத்தை அநுபவிப்பார்கள் 12-குளிகையின்விலை ரூபா 2. தபாற்செலவு அணு 4. இதன்குணத்தையும் என்னிடத்தில் கடிதமூலமாயாவது, சேரிலாவது விபரமறிந்துகொள்ளவும்.

—கெவ்காரதைலம்—பக்கவாய்வுக்குக் கைகண்ட உண்மையானமருந்து. இதன்விலை ஒருஅவுன்சக்கு ரூபா 5

—மஹாநாராயணதைலம்—வாய்வுகள், தபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா 1. மேற்கண்டமருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

## காமவிலாசலேகியம் அல்லது சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறுர்கள். இதை நான் விளம்பரத்தில் லோகநன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் நன்மை, சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனநலத்தைக் கருதியே இப்பொழுது இந்த லேகியததைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி குங்குமப்பூ சிலாஜித் கஸ்தூரி குமாஸ்தகா பீதானு சாலாமுஸ்லிசப்முதஸ்லி பிஸ்தாஸ் சார்ப்பருப்பு பாதம்பருப்பு சதாவரி நீர்முள்ளிவிரை நாகப்பூ வங்கபஸ்பம் அபாகபஸ்பம் பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப்பதங்கம் இன்னுமனேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனுல் நீரழிவு வெள்ளை நீர்மாவு சண்ணும்பு கரைத்ததுபோல் வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலச்சூடு ஒருவருஷததுக்குள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு இருமல் காசம் பித்தம் காமாலை பித்தபாண்டு பீனிசம் கைகால்வலி இடுப்புவலி பக்கவாய்வு சூலவாய்வு இன்றுமனேக கடுமையான வியாதிகள்தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் சூதகவாய்வு பிரசவஅறையில் உண்டாகும் பலரோய்கள் நீங்கது. தேகபுஷ்டியையும் பலத்தையுந்தரும் பாலையிர்த்திசெய்யும்.

சிலர் சூறணம் லேகியங்களால் சகல ரோகமுந்தீர்ந்து 80-வயதுள்ள முதியோரை யெளவனராக்குமென்றும் சந்தானமில்லாத ஸ்திரீகள் கற்பவதியாவார்களென்றும் பலவாறு விளம்பரங்களைப் பிதற்றித்திரிகிறுர்கள். அவ்விதம் பிதற்றவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை. ஆனுல் கர்ப்பந்தரிப்பதற்குத் தக்க ஔவுஷதம் என்னிடமுண்டு இஷ்டமுள்ளவர்கள் ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரிகளின் தேககுணததைத் தெரிவித்து ஔவுஷதத்திற்கு வேண்டிய பணமுஞ் செலவழிப்பார்களாகில் நான் ஔவுஷதப்பிரயோகஞ் செய்யககூடும். இதைப் புருஷர்கள் பெரிய நாரச்சிக்காய்ப் பிரமாணமும் ஸ்திரீகள் சிறிய நாரசிக்காய்ப் பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு 21-நாளும் பழைய வியாதிகளுக்கு 44-நாளும் அந்தந்த வியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படும் அனுபானத்துடன் சாப்பிடவேண்டும். விலை ருத்தலொன்றுக்கு ரூ. 20. கால் ருத்தலுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு 40-நாளைக்கு ஒருருத்தல் போதுமானது. ஸ்திரீகட்கு முக்கால் ருத்தல் இது சாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும். இதில் லாகிரியே கிடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின் விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் 8-அணு ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது. அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்பட மாட்டாது.

எமது விலாசம்.

ஆதிஆயுர்வேத அரோககுதகர் வைத்தியசாலை.
மகாராஜகெங்காபிரசாத் பண்டிதர்,
சிரிக்கிமுஹால்
கான்பூர்.

---

ஆதிரு தடந்தோள்வாழ்க அறுமுகம வாழ்க வெற்பைக், கூறுசெய் தனிவேல்வாழ்கக் குக்குடம் வாழ்கச்செவ்வேள், ஏறிய மஞ்ஞைவாழ்க யானைதன் அணங்கும்வாழ்க, மாறிலா வள்ளி வாழ்க வாழ்சீர் றடியரெல்லாம்.

---

PrinT,ed and published by M. S. Manicam Pllai FoP, the Proprieter atThe SRI Val ampiaPress Jaffna.